1986 நவம்பர் 20]

எனவே, அப்படிப்பட்ட நிலைக்கு தள்ளப்படுமானால், மாநில அரசே ஒரு ஆய்வாளரை அமர்த்தி, அது சரியா, தவறா என்று பரிசீலிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நரிமணத்திலே கிடைக்கின்ற எண்ணெயைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் அதற்கான தகுந்த விடையை நான் அளிக்க முடியும். தற்போது இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசை மேலும் கேட்டுக்கொண்டு வருகிறோம். இருந்தாலும், ஏற்கெனவே நான் சொன்னதுபோல், இரும்பு கனிமப் பொருளின் சத்து குறைவாக இருப்பதால், மத்திய அரசு அதை இன்னமும் ஆய்வில் வைத்திருக்கிறது.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் கிடைக்கக்கூடிய இரும்புக் கனியானது இலாபகரமானது, அதனால் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்க முடியும் என்றுதான் ஜப்பான் நாட்டிலுள்ள நிபுணர்களும், இந்தியாவிலுள்ள தஸ்தூர் கமிட்டி அறிக்கையும் கிடைத்த பிறகுதான் இன்றைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அன்றைய பாரதப் பிரதமர் மறைந்த அன்னை இந்திரா காந்தி அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்து, இரும்பாலைக்கு அடிக்கல் நாட்டினார்கள். அதன் அறிகுறியாக, சேலத்து மாங்கனியைக் கூட, தங்கத்தில் செய்து, அந்த இரும்புக் கனியை எடுத்து தொழிற்சாலை அமைக்க மாங்கனியை அளித்தார்கள். அப்படி இலாபகரமாக இருக்கிறது என்ற ஆய்வுக்குப் பிறகு தானே அடிக்கல்லே நாட்டப் பட்டது? இடையிலே தடைக்கல் ஏற்பட்டதற்கு யார் காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து, அந்த தடைக் கல்லை நீக்கி, உடனே உருக்காலை ஏற்பட வழிவகை காண்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நல்ல யோசனை, வரவேற்கத்தகுந்தது.

குடிநீர் வடிகால் வாரியத்தை பிரித்தல்.

102—(*வினா எண் 8555) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிதண்ணீர் வடிகால் வாரியத்தை நிர்வாக நலனுக்காக பிரித்து அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): மதுரையைத் தலைமை யகமாகக் கொண்டு தெற்கு மண்டலம் 15—9—1985 முதல் செயல்பட்டு வருகிறது. திருச்சியைத் தலைமையகமாகக் கொண்டு மத்திய மண்டலமும், கோயம்புத்தூரை தலைமையக மாகக் கொண்டு மேற்கு மண்டலமும், வேலூரைத் தலைமையக மாகக் கொண்டு வடக்கு மண்டலமும், 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் செலவு எவ்வளவு? குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமை அலுவலகத்தை மையமாக இருக்கின்ற ஓரிடத்தில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு எவ்வளவு செலவாகின்றது என்ப தற்கு தனிக் கேள்வி போட்டால் சொல்ல முடியும். திட்டங் களுக்கு ஏற்ப செலவு வந்துகொண்டே இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவ மழை தவறியுள்ள இந்த நேரத்தில், சென்னை போன்ற நகரத்தில் ஏற்பட்டிருக்கின்ற குடிநீர் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்கு முன்னெச்சரிக்கையாக குடிநீர் வடிகால் வாரியம் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சென்னைக்குத் தனியாக இது குறித்து கவனிக்க ஒரு நிர்வாகம் இருக்கிறது. அது சென்னை நகர குடிநீர் பிரச்சினைகளைத் தனியாக கவனித்து வருகிறது. எங்கு தட்டுப்பாடு ஏற்பட்டா லும், அதற்குப் பரிகாரம் தேட இந்த நிர்வாகம் ஆவன செய்து வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாரியம் பிரிக்கப்பட்ட விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது மாநக ராட்சி நிர்வாகத்திற்கு உட்பட்டதா? அல்லது மாநகராட்சியி லிருந்து பிரித்து, சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம் என்று அமைக்கப்பட்ட ஒரு அமைப்பா? அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தோடு இணைக்கப்பட்ட அமைப்பா என்று அறிய விரும்புகிறேன்.

1986 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அமைப்பு மாநகராட்சிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. க. பாரமலை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய விஸ்தரிப்புப் பணிகளைக் கவனிக்க அதன் மண்டலங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்படி பல மண்டலங்களுக்கு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருந்தும்கூட, இன்னும் பல்வேறு இடங்களில் ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மேல்நிலை தொட்டிகள் 4, 5 வருடங்கள் ஆகியும் இயங்காமல் இருக்கின்றன, அவற்றை சீர்செய்ய சிறப்புத்திட்டத்தை உருவாக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எங்கெங்கு மேல்நிலைத் தொட்டிகள் செயல்படாமல் இருக்கின்றனவோ, அந்த விவரங்களைத் தந்தால், அதற்கான தக்க நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாகத்தை செம்மைப்படுத்த குடிநீர் வடிகால் வாரியத்தின் பல்வேறு ரிஜீனல் ஆபீசுகளை அமைத்துள்ளதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய தலைமை நிர்வாகக் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே பிரதிநிதிகளாக இல்லை. ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் மட்டுமே குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாகக் குழுவில் நிர்வாக உறுப்பினர்களாக இருக்கிறார்கள். பல திட்டங்களை நிறைவேற்றுவதிலே இதன் காரணமாகத் தாமதப்படுகிறது. ஆகவே, எங்களைப் போன்றவர்கள் இந்தக் குழுவிலே உறுப்பினர்களாக இருப்பது சிறந்ததாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். 2, 3 சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுவிலே பங்கு பெறுகின்ற முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஒரு புதிய யோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு ஆராயும்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியை மையமாகக் கொண்டு ஒரு மண்டலம் ஏற்படுத்தப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருச்சியை மையமாகக் கொண்ட அந்த மண்டலத்தில் எந்தெந்த மாவட்டங்கள் இணைக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 20

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, திருச்சி மத்திய மண்டலமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதிலே திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய 3 மாவட்டங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

[முற்பகல் 9-30]

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் உள்ள வடக்கு மண்டல அலுவலகத்தை சென்னைக்கு மாற்றமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். இங்கே சென்னையிலே நமக்குச் சொந்தமான பெரிய கட்டடம் இருக்கிறது. அதிலே அந்த அலுவலகத்தை வைத்துக்கொள்ள லாம். மேலும் தொழிலாளர்களை இங்கே இருந்து மாற்ற வேண்டியதில்லை. ஆகவே வேலூரிலிருந்து சென்னைக்கு அந்த அலுவலகத்தை மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலிருந்து அதை சென்னைக்கு மாற்றுகிற உத்தேசம் இல்லை. அப்படி பிரிவுகள் இருந்தால் தான் வேலைகள் சுமுகமாக நடைபெறும் என்பது தான் நடைமுறை சாத்தியக்கூறாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கன்னியாகுமரி மாவட்டம் கொல்லன் விளையில்.
விளையாட்டு அரங்கம்.

103—(*வினா எண் 4505) திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் நகராட்சிக் குட்பட்ட கொல்லன்விளையில் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள இடத்தில் உடனடியாக விளையாட்டரங்கம் கட்டுவதற்கு அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.